மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

3. தகவல் கோரல்.

(அ) முதலமைச்சர் சினிமாவில் நடிக்க பதவி விலக இருப்பது குறித்து.

*திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே நேற்று முன் தினம் நான் இந்த அவையில் ஒரு பிரச்சினையைக் கிளப்பினேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்யப் போகிறார்களா, சினிமாத் துறைக்கு போகப் போகிறார்களா என்றெல்லாம் கேட்டேன். அதற்கு அவர்கள் வாயிலிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள், அவர்கள் இந்த அவைக்கு வரும்போது தகுந்த பதில் அளிப்பார்கள் என்று சொன்னீர்கள்.

முந்தா நாள் மாலையில் ஒரு பத்திரிகையில் செய்தி வந்தது. மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் அறிக்கை எம்.ஜி. ஆர். அவர்கள் பதவி விலகல் சம்பந்தமாக வந்திருக்கிறது. அவர்கள் உங்களையும் மீறியிருக்கிறார்களா-மீறப்பட்டது என்று சொல்ல மாட்டேன்-ஆனால் இந்த அவைக்கு உரிய மரியாதை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைகளில் வருவதை வைத்துக் கொண்டு, எழுத்துமூலமாகத் தராமல் அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு உங்களுக்குப் பதில் சொல்ல முடியாது; இயலாது. பத்திரிகைகள் பலவகைகள், பல எண்ணங்களை வெளியிடலாம், அதில் நான் குறுக்கிட முடியாது. ஆனால் எழுத்து மூலமாக ஏதாவது ஒரு விதியின்கீழ் இருக்கிறது என்று சொன்னால் அதை ஏற்றுக்கொண்டு பரிசீலனை செய்ய எனக்கு உரிமை இருக்கிறது. நீங்கள் அன்று அப் பிரச்னைபற்றி எழுப்பிய நேரத்தில், முதல் அமைச்சர் அவர்கள் இருக்கும்போது எழுப்பினால் அவர்கள் கருத்தை நன்கு இந்த அவை அறிந்துகொள்ள முடியும் என்று சொன்னேன். அவர்கள் வருகிறவரை நான் அவையின் சார்பில் எதையும் சொல்ல இயலாது.

(ஆ) வேலைநீக்கம் செய்யப்பெற்ற போலீசார் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பெறுவது குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, போலீசார் சங்கம் வைக்க வேண்டுமென்று கோரி போராட்டம் நடந்து 76, 77க்கு மேற்பட்டவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் சட்டப் பேரவை உறுப்பினர்; வழக்கறிஞர். இப்போது பொது விவாதம் நடந்து கொண்டிருக்கின்றது. உங்களுடைய கருத்து வந்துவிட்டது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக வெளியே பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன. திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவார்களா என்பது விசாரணையில் இருக்கிறது. எனவே, அரசு அறிக்கை வைக்கத் தயாரா என்பது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் திரு. ரகுமான்கான் பிரச்னையைப் பற்றிச் சொல்கிறேன். அது இப்போதைக்கு முடிகின்ற விவகாரம் அல்ல. நீண்டகாலமாக இருக்கின்ற பிரச்னை இரண்டு நாட்களுக்குப் பிறகு முதல் அமைச்சர் அவர்கள் நன்றி உரைக்கு பதில் அளிக்கின்றபோது இதுபற்றி எழுப்பலாம், அவரது கவனத்திற்குக் கொண்டு வரலாம். இன்றைக்கு இது அவசரமான, முக்கியமான பிரசனை அல்ல. எனவே, இது ஒழுங்கு பிரச்னை இல்லை. அமருங்கள். திரு. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே•

* *

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது